REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 13உ செவ்வாய் (26–4–55) ★ ★ வெளியீடு: சித்திரை 14உ புதன் (27—4—55) [இதழ் 260

அநியாய வட்டி வாங்குவதைத் தடுக்க...

மத்திய சர்க்கார் சட்டம் இயற்றுகிறதாம்

கிராமப்புறங்களில் தனிப்பட்டோர் கடன் லேவாதேவி செய்வதைக் கட்டுப்படுத்த தகுந்த சட்டம் ஒன்றை இயற்றுவது பற்றி இந்தியப் பேரரசு யோசித்துவருவதாகத் தெரிகிறது. கிராமங்களில் கடன் வாங்குபவர்களிடம் அநியாய வட்டி வசூலிக்கப்படுவதைத் தடுத்து, நியாய வட்டி மட்டுமே வசூலிக்கப்படுமோது பார்த்துக்கொள்வதே உத்தேச சட்டத்தின் நோக்கமாம். மிகப் புதியதான இந்த ஏற்பாடு பற்றி தகுந்த பிரச்சாரம் செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்தும் சர்க்கார் யோசித்துவருகிறதாம்.

தக்கர்பாபா வித்தியாலயத்தில் பண ஊழலா?

1,000 வேலைகளுக்கு 20,000 பேர் கூடினர்

பம்பாய் துறைமுகத்தில் தடியடி

பம்பாய், எப் 25—

கப்பல்களில் சாமான்களை ஏற்றி இறக்குவோர் சங்க அலுவலகத்தின் முன், சுமார் 20 ஆயிரம் பேர் வரை வேலை தேடிக் கூடிவிட்டனர்.

கூட்டத்தைச் சமாளிப்பதில் சிரமங் கண்ட போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனராம்.

சங்கத்தவர் சுமார் 1,000 பேர் வேலையிலமர்த்தப்படுவர் என்று அறிவித்ததின் விளைவாகவே 20 ஆயிரம் பேர் அங்கு கூடினராம்.

நான்கு வல்லரசு மாநாடு

கூட்டுவது பற்றி மூன்று வல்லரசுகள் ஆலோசனை!

ரஷ்யாவுடன் கூட்டாக நான்கு வல்லரசு மாநாடு கூடுவதற்கான திட்டவட்டமான ஏற்பாடுகளைப் பற்றிப் பேச . பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று வல்லரசுகளின் அயல்நாட்டு மந்திரிகள் வரும் மே மாதம் 8-ந் தேதியன்று பாரிசில் கூடுவரென்று தெரிகிறது

வேலை தேடித் தரும் நிறுவனங்கள்

மாநில அரசாங்கங்களே நிர்வகிக்கும்

இந்தியப் பேரரசு நிர்வகித்து வரும் இந்தியாவெங்கணுமுள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்களை இன்னும் பரவலானவைகளாக்கி, பல மாநிலங்களிலிருப்பவற்றை அந்தந்த மாநிலங்களின் பொறுப்பிலேயே நிர்வகிக்குமாறு விட்டுவிடுவதென கொள்கை அடிப்படையில் இந்தியப் பேரரசு முடிவுசெய்திருக்கிறதாம்.

இனி, அந்த நிறுவனங்களை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பையும் மாநில அரசாங்கங்களே மேற்கொள்ளும் என்று தெரிகிறது.

நிர்வாகத்திற்கான செலவை ஆறுக்கு நாலு—என்ற விகிதத்தில் மத்திய, மாநில அரசாங்கங்கள் பகிர்ந்துகொள்ளுமாம்.

அரசாங்க பாங்கி மசோதா

நஷ்டஈடு அதிகமென உறுப்பினர் கருத்து

புதுடில்லி, ஏப். 25—

இம்பீரியல் பாங்கியை தேசிய உடைமையாக்குவதற்கும், புதிய அரசாங்க பாங்கி ஒன்றை நிறுவுவதற்கும் வழி வகுக்கும் அரசாங்க பாங்கி மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கோரும் பிரரேபனை மக்கள் சபையில் நிறைவேறியிருக்கிறது.

திருத்தங்கள் கொண்டுவருவது பற்றி உறுப்பினர்கள் யோசிக்கவே இந்த காலவரையறை தரப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது.

இன்று நடைபெற்ற விவாதத்தின்போது, நஷ்டஈடு மிகவும் அதிகமென பல உறுப்பினர்கள் கூறினர்.

15,000 தொழிலாளர் ஈடுபட்டுள்ள பொது வேலை நிறுத்தம்

400 பேர் கைது செய்யப்பட்டனர்

அமிர்தசரஸ், ஏப். 24—

அமிர்தசரசில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு சுமார் 15,000 தொழிலாளர்கள் மேற்கொண்ட பொது வேலை நிறுத்தம் இன்னும் தொடர்ந்து நீடித்திருக்கிறது.

தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக இதுவரை சுமார் 400 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

மூடப்படுகிறது!

கராச்சி, ஏப். 25—

ஆப்கனிஸ்தானில் ஜலாலாபாத் எனுமிடத்தில் உள்ள பாகிஸ்தான் தூதுவராலயப் பிரிவு அலுவலகத்தை மூடிவிட பாக். சர்க்கார் முடிவு செய்திருப்பதாயும், அதனை ஆப்கன் சர்க்காருக்கும் அறிவித்துவிட்டதாயும் தெரியவருகிறது.

'கணக்குக் கொடுக்காமலே கடனை வைத்துள்ளனர்'

முன்னாள் நிர்வாகிகள் குறித்து இந்நாள் நிர்வாகியின் முறையீடு

விசாரணை செய்யும் சர்க்கார் முயற்சிக்கு ஆதரவு

தக்கர் பாபா வித்தியாலயத்தின் முன்னாள் நிர்வாகிகள்மீது தாம் கொண்ட அதிருப்தியின் காரணமாக, 1953 ஜன. 9-ந் தேதி, அவர்களிடமிருந்து அதன் நிர்வாகத்தை அரிசன சேவா சங்கம் நேரடியாக ஒப்புக்கொண்டது.

முன்னாள் நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புகளில் இருந்துவந்த வி. பாஷ்யம் அய்யங்காரும், சி. ஆர். இராமசாமியும், தங்களுடைய நிர்வாகக் காலத்தின் கணக்குகளை இன்றுவரை கொடுக்கவில்லை.

8 சதவிகிதம் வட்டிக்கு வாங்கிய ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் கடனை, அவர்கள் வித்தியாலயத்திற்கு விட்டுச்சென்றுள்ளனர்.

சர்க்காரிடமிருந்து உபகார நிதியாக ரூ. 1,80,000-மும், காந்தியாரால் வசூலிக்கப்பட்ட ரூ. 1,32,076—13—6-ம் வித்தியாலயக் கட்டிடங்களுக்கென பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும்கூட, கட்டிடம் அரைகுறையாகவே இருந்துவருகிறது.

அப்பெருந்தொகை, கட்டிடங்களுக்கென மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தும்கூட, அது, வேறு இனங்களில் செலவழிக்கப்பட்டுள்ளது.

அவ்வினங்களில், பெரும் பொருள் நஷ்டத்தில் நடந்தப்பெற்ற கண்காட்சியும் சேர்ந்துள்ளது.

அக்கணக்குகள் தரப்படவில்லை அல்லது தணிக்கை செய்யப்படவில்லை.

முடிவு பெறாத கட்டிடங்கள், இந்நாள் நிர்வாகிகளால் 1953-ல் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குரிய கணக்கும் தரப்பட்டிருக்கிறது.

வி. பாஷ்யம் அய்யங்காரும், சி. இராஜம் இராமசாமியும் தக்கர் பாபா வித்தியாலய விவகாரங்களை அரசாங்கம் ஆராய வேண்டுமென விண்ணப்பித்துக்கொண்டனர். அதற்கு அரசாங்கமும் இணக்கம் தெரிவித்துள்ளது.

அதுகண்டு, தற்போது வித்தியாலயத்தின் செயலாளராக இருக்கும் எல். என். கோபால்சாமி அவர்கள், அரசாங்க முடிவை வரவேற்றும், அரசாங்க ஆய்விற்கு மட்டுமல்லாமல், வேறு பொதுமக்கள் ஆய்வுக்கும் தாம் தயாராக இருப்பதாக அறிவித்தும், உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் ஆய்வு நடைபெற வேண்டுமெனக் கோரியும் அறிக்கை ஒன்று கொடுத்துள்ளார். மேற்குறிப்பிட்டுள்ள, முன்னாள் நிர்வாகிகளின்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும் அவ்வறிக்கையில் தந்துள்ளார், கோபால்சாமி.

'மத்திய அரசாங்கத்திடம் மாநில அரசாங்கம் தன்னை அடமானம் வைக்கிறது'

ஆந்திர சர்க்கார் போக்கு பற்றி ம.சோ. கட்சித் தலைவர் பி. வி. ஜி. ராஜு எம்.எல்.ஏ.

கர்னூல், ஏப். 25—

" நந்திகொண்டா திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்காக மத்திய அரசாங்கம் விதித்த நிபந்தனைகளை மாநில சர்க்கார் ஏற்றுக்கொண்டதின் விளைவாகத்தான் பிரகாசம் மந்திரி சபை, 'ஏழை விவசாயிகளுக்கு நிலவரி விதிப்பிலின்றும் விலக்களிப்பது,' என்று மேற்கொண்ட முடிவை மாற்ற சர்க்கார் எண்ணுவதாக யூகிக்க வேண்டியுள்ளது.

" மாநில அரசாங்கம், இதனுல் மத்திய அரசாங்கத்திடம் தன்னை அடமானம் வைப்பதுபோல் தெரிகிறது,"

—என்று, ம. சோ. கட்சித் தலைவர் பி. வி. ஜி. ராஜு எம்.எல்.ஏ. குறிப்பிட்டிருக்கிறார்.

" பிரகாசம் சர்க்கார், 'ஏழை விவசாயிகளுக்கு நிலவரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது,' என்று வெளியிட்டிருந்த திட்டத்தை அமுலாக்குவதில்லை என, புதிய ஆந்திர சர்க்கார் முடிவு செய்திருப்பது காங்கிரசார் உட்பட பல கட்சியினரிடையேயும் பலத்த கண்டனக் குரலை எழுப்பியிருக்கிறது

" தேர்தல் அறிக்கையில், ஏழை விவசாயிகளுக்கு நில வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்படுருப்பது முக்கியமானதோர் இடம் பெற்றிருந்தது; அந்த முடிவு இப்போது—தேர்தலுக்குப் பின் — மாற்றப்படுவது, வாக்காளர்களை அவமதிப்பதாகும்,"

என்று, இரு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் கருத்தறிவித்துள்ளனராம்.

ரூ. 11-லட்சம் செலவில்!

சென்னை மாநிலத்தில் வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த வாணிமங்கலத்தில், கம்பளித் தயாரிப்பு நிலையமொன்றை ஏற்படுத்துவதற்காக, சென்னை, மைசூர் சர்க்கார்கள் கூட்டாகத் தயாரித்துள்ள திட்டத்துக்கு மொத்தம் ரூ. 11 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—12/55

மே விழா

✶

திராவிட நாட்டின் ஏழை எளிய பாட்டாளித் தொழிலாளத் தோழர்களின் அமைப்பாக இருந்து பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் ஆங்காங்கு 1—5—55-ஆம் நாளிலிருந்து 10—5—55-ஆம் நாள் வரையில், ஏதேனும் ஏற்ற ஒரு நாளில் உரிய சிறப்பான முறையில் கொண்டாடும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகத் தோழர்கள் துண்டு அறிக்கைகள் வழங்குதல், ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல் போன்ற முறைகளில் விழாவைக் கொண்டாடுவார்களாக! பல்வேறு துறைத் தொழிலாளர்களை முன்னேற்றக் கழகக் கொடியின்கீழ் ஒன்றுதிரட்டுவார்களாக!

மே நாள் நோக்கம் திராவிடத்தின் திக்கெட்டும் பரவுமாக!

" அறிவகம்" சென்னை 26—4—55 }

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சோமசீலா திட்டம்

நெல்லூர் பி. சோ. கட்சி கிளர்ச்சி செய்யும்

நெல்லூர், ஏப். 24—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சோமசீலா திட்டத்தைச் சேர்க்கும்படி ஆந்திர சர்க்காரை வற்புறுத்த நெல்லூர் மாவட்ட பிரஜா-சோஷலிஸ்ட்கட்சி கிளர்ச்சி செய்வதென்று தீர்மானித்திருக்கிறது.

இக்கிளர்ச்சியில் முக்கிய கட்டம் சர்க்காரை வற்புறுத்த 1,00,000 கையெழுத்துக்கள் சேகரிப்பதாகும்.

சோமசீலா திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்குமாறு பல இடங்களிலும் விவசாயிகள் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுமாம்.

இக்கிளர்ச்சியை நடத்த பி. பாபி ரெட்டி, ஜி. சி. கொண்டய்யா, கே. தசரதராமி ரெட்டி ஆகியோர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 26—4—'55 செவ்வாய்

மகத்தான வெற்றி!

ஆப்பிரிக்க - ஆசிய மாநாடு என்ற பெயரில் இந்தோனேஷியாவில் உள்ள பாண்டுங் நகரில் கடந்த ஒரு கிழமையாக நடைபெற்ற மாநாடு நேற்றோடு முடிவடைந்துவிட்டது.

மேற்படி மாநாட்டில் பங்கு கொண்ட நாடுகள் அனைத்தும், ஐரோப்பிய வல்லரசுகளின் அரசியல் ஆதிக்கத்தையும், அதன் வழி நிகழ்ந்த பொருளாதாரச் சுரண்டலையும் சென்ற பல ஆண்டுகளாக அனுபவித்து வந்தவைகளே யாகும். அந்த நாடுகள் அனைத்தும் இன்று விடுபட்ட நாடுகளாகவே இருக்கின்றன.

இருந்தாலும், பல ஆண்டு அனுபவம்; ஐரோப்பிய வல்லரசுகளிடம் அவநம்பிக்கை கொள்ளுமாறு, அவைகளில் பல நாடுகளை வைத்திருக்கிறது. அதற்காக, சென்றுபோன சம்பவங்களுக்காக மேற்கத்திய வல்லரசுகளை, இத்தருணத்தில் குறை சொல்வதிலும் இலாபமில்லை — கோபித்துக்கொள்வதிலும் பலனில்லை—கண்டிப்பதில் பொருளே இல்லை.

ஆப்பிரிக்க-ஆசிய நாடுகள், தாங்கள் பெற்று அனுபவித்து வரும் அரசியல் சுதந்திரத்தைக் கட்டிக் காத்து, முற்போக்கான முறையில் வளர்த்துவருவதில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். சுதந்திரத்தைக் காப்பது என்ற போர்வையில், உள்நாட்டு மக்களின் நல்வாழ்வையும், உரிமைகளையும் சூறையாடுவதை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஆளவந்தார்கள் மேற்கொள்ளுவதும் கூடாது; அதனால் சுதந்திரம் காப்பாற்றப்பட்டதும் இல்லை—காப்பாற்றவும் முடியாது. அப்போக்கு உள்நாட்டில் குழப்பத்தை மூட்டவும், கை வலுத்த பிற நாட்டினரை வாழ்த்தி வரவேற்கவும் தான் வழி செய்யும். இம்மகத்தான உண்மையைத்தான், பொதுவாக உலக வரலாறும்—குறிப்பாக இந்தியத் துணைக்கண்ட வரலாறும் நமக்கு அறிவுறுத்துகின்றன.

பாண்டுங் மாநாட்டில் கலந்துகொண்ட ஆப்பிரிக்க—ஆசிய நாடுகள் பலவற்றுள், ஆட்சி பீடம் ஏறியுள்ள ஆளவந்தார்கள் அனைவருமே, சொந்த நாட்டு மக்களுக்கு வாழ்வளிப்பதையும், அடிப்படை உரிமைகளை பேணி வளர்ப்பதையும் கடமைகள் எல்லாவற்றிலும் முக்கியமான ஒன்றாகக் கொண்டிருக்கிறார்கள் என உறுதியாகக் கூறுவதற்கும் இல்லை. கிடைத்த அதிகாரம் தங்கள் கைகளை விட்டுப் பறிபோகாமல் பார்த்துக்கொள்வதிலும் காட்டப்படும் அளவு அக்கறை அவர்கள் பெரும்பான்மையான குடிமக்கள் விஷயத்தில் காட்டுவதே கிடையாது. ஆனால், அதே நேரத்தில், பொதுமக்களின் சுக துக்கம் குறித்து, சொல்லலங்காரமாகப் பேசுவதை ஒரு விநாடியும் மறப்பதும் கிடையாது.

எடுத்துக் காட்டுக்காக எகிப்தை எடுத்துக் கொள்வோம். அங்கு இன்னும் இராணுவத்தின் பெயரால்தான் ஆட்சி நடைபெற்று வருகிறது. நாட்டை ஆளுவது நாசரா, நகிபா என்ற அதிகார அரசியல் பிரச்சினையில், கர்னல் நாசர் வெற்றி பெற்று விட்டார். அந்த வெற்றி எதிர்காலத்தை நிர்ணயிக்கும் துவக்கமா அல்லது இறுதியா என்பதை இன்னும் நிச்சயப்படுத்திக் கூறி விடுவதற்கில்லை.

நகிபா அல்லது நாசரா என்பதில் நாசர் பெற்ற வெற்றி, அதிகாரத்தில் உள்ள இராணுவக் குழுவினரின் மற்றொரு வெற்றியே அல்லாது, எகிப்து மக்களின் முதல் வெற்றியாகாது. அரசியல் வரலாறு பயின்ற எவரும், நாசரின் வெற்றியை எகிப்து மக்களின் அரசியல் வெற்றி எனக் கூறத் துணியார்.

எகிப்து மக்களுக்கும், அவர்களின் பெயரால் எகிப்தை ஆண்டுவரும் நாசர் இராணுவக் குழுவினருக்கும், ஜனநாயக முறைப்படி அரசியல் உறவு ஏற்பட்டு இருப்பதாகக் கூறுவதற்கில்லை. இனிதான், அந்த இன்றியமையாத உறவு ஏற்பட வேண்டும். ஏற்படுமா, ஏற்படாதா என்பது, அந்த இரு சாராரும் எதிர்காலத்தில் நடந்துகொள்ளும் நடப்பைப் பொறுத்து இருக்கிறது.

அடுத்துள்ளது பாகிஸ்தான். அங்குள்ள அரசியல் தலைவர்கள் ஒரு முனை நோக்கிச் செல்லுகிறார்கள்; அதற்கு எதிர் முனை நோக்கி மக்கள் செல்லுகிறார்கள். கவர்னர்—ஜெனரலோ இரு முனைக்கும் ஒரு இடைமுனை காண முழு மூச்சுடன் முயலுகிறார். அவர் முயற்சி வெற்றி பெறுமா இல்லையா என்பது ஒரு பக்கம் இருக்க, அப்படி முயற்சிக்க அவருக்கு அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்பதில் முடிவுகூற வேண்டிய கட்டத்தில், பாக். தலைமை நீதிமன்றம் நிற்கிறது.

அரசியல் தலைவர்கள் நினைக்க இருக்கும் அரசியல் ஏற்பாட்டிற்கும், பாக். மக்களுக்கும் அணுவளவு தொடர்பும் அறவே இல்லை. மக்களின் கருத்தோ ஒரே உருவம் பெறவில்லை. நல்வாழ்வு அனைவருடைய பொது நோக்காக இருந்தபோதிலும், அதைப் பெறும் அமைப்பிலும், மேற்கொள்ளத்தக்க நடைமுறையிலும் ஒன்றுபட்ட கருத்து உருவாகவில்லை. அரசியல் தலைவர்களிடம காணப்பெறும் அடிப்படை வேற்றுமை அளவுக்குக் கூடுதலான அளவு வேற்றுமை, பாகிஸ்தான் மக்களிடம் பரவலாக இருக்கிறது.

அடுத்தது இலங்கை. பல ஆண்டு காலமாகவே அந்நாட்டுக் குடிகள் போல் வாழ்ந்து வரும எட்டு இலட்சம் தமிழ் மக்களை, இந்தியத் துணைக்கண்டத்திற்கு அனுப்ப இலங்கை ஆளவந்தார்கள் தீவிரமாக முயன்று வருகிறார்கள். அது கண்டு ஒரு அரசுக்கு ஏற்பட வேண்டிய பதைப்பும் திகைப்பும் இந்தியப் பேரரசுக்கு அறவே ஏற்படவில்லை. 'நான் நோகாமல் அடிக்கிறேன்—நீ ஓயாமல் அழு' என்ற தோரணையில் இலங்கை இந்தியத் தமிழர்கள் பிரச்சினையை இந்தியப் பேரரசு கருதி வருகிறது.

அங்குள்ள இந்தியத் தமிழர்களை, தம் குடிமக்கள் அல்ல எனக் கூறி வெளியேற்ற இலங்கை முயற்சிக்கிறது என்றால், அவர்கள் அனைவரும் 'நாடோடிகள்' என இந்தியப் பேரரசு அவர்களுக்கும் இழிபட்டம் சூட்டி இதயம் பூரிப்பதை இந்தியப் பேரரசு கடமையாகக் கொண்டிருக்கிறது.

இத்தகு குணச் சிறப்பு கொண்ட ஆப்பிரிக்க - ஆசிய நாடுகள்தான் பாண்டுங்கில் கூடின. உள்ளுக்குள்ளே ஒன்றை ஒன்று பற்றி மூண்டு வரும் பிணக்கு அல்லது பகை உணர்வை, மேற்படி அரசுகள், கடந்த ஒருவாரமாக நடைபெற்ற பாண்டுங் மாநாட்டில் நிச்சயமாக மறந்தே இருந்திருக்கின்றன. அதைப் பொறுத்த வரையில் பாண்டுங் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

பாகிஸ்தானில் ஒரு சீக்கியபகுதி

மாஸ்டர் தாராசிங் கோரிக்கை

ஜலந்தர், எப் 25—

மேற்கு பாகிஸ்தானில் வசிக்கும் 'குருத்துவாரா'க்களின் பாதுகாப்பிற்காக அங்கு ஒரு 'சீக்கியப் பகுதி' உருவாக்க வேண்டுமென்று சிரோமணி குருத்துவார் பிரபந்தக கமிட்டித் தலைவர் மாஸ்டர் தாராசிங் தெரிவித்திருக்கிறார்.

பாக். பகுதியில் உள்ள ராவி நதியோரத்தில் சுமார் 40 சதுர மைல்களைக் கொண்டதாயிருக்கும் அந்த 'சிக்கியப் பகுதி' என்றும் அந்த அகாலிதளத் தலைவர் கூறியிருக்கிறார்.

குருநானக் இயற்கை எய்திய 'குருத்துவாரா கர்தாபூர்' என்ற இடம்தான் அந்த சீக்கியப் பகுதியின் மையமாக விளங்கும் என்று தெரியவருகிறது.

25 முதல் 40 கிராமங்கள் வரை உள்ளடங்கும் 'சீக்கியப் பகுதி'யை உருவாக்குவதற்கு பிரதிபலனாக, பாகிஸ்தானில் வசிக்கும் எல்லா 'குருத்துவாரா'க்களுக்குச் சொந்தமான நிலங்களையும் பாகிஸ்தான் சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம் என்றும் மாஸ்டர் தாராசிங் யோசனை கூறியிருக்கிறார்.

இந்தத் திட்டம் பற்றி இந்திய, பாகிஸ்தான் அரசாங்கங்களுக்கு சீக்கிரமே அவர் அறிவிப்பாராம்.

கூறப்பட்டுள்ள 'சீக்கியப் பகுதி'யில் வாழும் முஸ்லிம்கள், வேறு பகுதிகளில் வாழும் 'குருத்துவாரா'க்களிடமிருந்து பாகிஸ்தான் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நிலங்களில் குடியேற்றப்பட வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

பின்பு அந்த 'குருத்துவாரா கர்தாபூர்', அதைச் சுற்றியுள்ள இடம் ஆகியவற்றின் நிர்வாகம், சிரோமணி குருத்துவார் பிரபந்தக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், என்றாலும், அந்த 'சீக்கியப் பகுதி' பாகிஸ்தானின் ஒரு பகுதியாகவே இலங்கும் என்றுதான் உறுதி அளிப்பதாயும் மாஸ்டர் தாராசிங் கூறியிருக்கிறார்.

அந்தப் பகுதி நிர்வாகத்தை, ஒரு சீக்கியராயிருக்கும் பாகிஸ்தான் அதிகாரியின் ஒத்துழைப்புடன் நிர்வாகம் செய்வதாகவும் தாராசிங் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய டெலிபோன் உற்பத்தி சாலையில், 1954 எப்ரலிலிருந்து டிசம்பர் வரை, மொத்தம் 26,000 டெலிபோன்கள் உற்பத்தி செய்யப்பட்டன,

'சம்மேளனம்—அம்பேத்காரின் சொந்தச் சொத்தா?'

'அவர் என்ன ஆண்டவரின் தூதுவரா?'

அம்பேத்கார் குற்றச்சாட்டுக்கு சிவராஜ் தரும் பதில்

சென்னை, ஏப். 24—

"நான், அகில-இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் தலைவராக டாக்டர் அம்பேத்காரால் நியமிக்கப்பட்டேன் என்பதே தவறு; என்னைத் தலைவராக நியமிப்பதற்கு அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அதுபற்றி அவர் கூறவில்லை.

"கடந்த 1942 ஜுலையில், 'வைசிராய் கவுன்சில்' உறுப்பினராக அவர் இருந்தாரே, அந்த அதிகாரங்கொண்டா' அல்லது இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக கடவுளால் அனுப்பப்பட்ட தூதுவர் என்ற அதிகாரங்கொண்டா அவர் என்னைத் தலைவராக நியமித்தது?

"உண்மையென்னவெனில், 1942-ல் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டிற்கு நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்; அந்த வகையில், நான், சம்மேளனத்தின் தலைவரானேன்; அன்று முதல் தொடர்ந்து தலைவராயிருந்து வருகிறேன்;

"என்னிடமே திரும்பவும் சம்மேளனத் தலைமைப் பொறுப்பைத் தருவதாக அம்பேத்கார் கூறுகிறார்; சம்மேளனம் என்ன—அம்பேத்காருடைய சொந்த சொத்தா? அல்லது என்னுடையதா? இல்லையே! சம்மேளனம் தாழ்த்தப்பட்ட மக்களுடையது,"

—என்று, அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர் என். சிவராஜ், சென்ற வாரம் தன்னைப் பற்றி டாக்டர் அம்பேத்கார் விடுத்திருந்த அறிக்கைக்கு மறுப்பு தரும் வகையில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அந்த அறிக்கையில் காணப்படுவதாவது:—

"மேலும் டாக்டர் அம்பேத்கார், ராஜ்போஜ் கொண்டுவந்த தீர்மானம் ஒன்றின் மூலம், கடந்த 1952-ல் நடைபெற்றதாகக் கூறப்படும் செயற்குழுவில், நான் சம்மேளனத் தலைமைப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டதாக முடிவெடுக்கப்பட்டதெனக் கூறியிருக்கிறார். இந்த நடைமுறை, வழக்கத்திற்கு விரோதமானதும் முறையற்றதுமாகும். இருந்தாலும், முடிவுக்கு நான் கட்டுப்பட்டிருப்பேன்—எனக்கு, செயற் குழு பற்றி அறிவிக்கப் பட்டிருந்தால்! இப்போதுதான் முதல் முறையாக நான், அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததாகக் கேள்விப்படுகிறேன்; இதுவரை எனக்கு எதுவுமே தெரியாது. எனக்கு அனுப்பப்பட்ட செயற்குழுவின் நடவடிக்கைகள் பற்றிய சுற்றறிக்கையில் இந்த விபரம் குறிக்கப்படவும் இல்லை.

"டாக்டர் அம்பேத்காரும், ராஜ்போஜும் இதுபற்றி மௌனமாக இருந்து வந்திருக்கின்றனர். நானும் அவர்களை இதற்கிடையில் பல முறை சந்தித்துள்ளேன்.

"இதற்கெல்லாம் மேலாக டாக்டர் அம்பேத்கார், என்னை ராஜினாமாச் செய்யுமாறு தான் வற்புறுத்தவில்லை என்றும், ஆனால் தலைமைப் பொறுப்பை தான் ஏற்றுக்கொண்டுவிட்டதாயும் கூறுகிறார். இவை எல்லாம் எனக்கு எதும் தெரியாமலே எப்படி நிகழமுடியும் என்பது எனக்குப் புரியவில்லை.

"நான் சம்மேளனத்தின் 'சாய்ந்த தூண்' என்று அவர் கூறியிருக்கிறார்; ஆனால் நான் எப்படிச் சாய்ந்த தூணாக இருக்கிறேன் என்பது பற்றி அவர் கூறவில்லை;

"ஆனால் 'சம்மேளனத்தின் தூணாக' சென்னையில் 1927 லிருந்து நான்தான் இருந்து வருகிறேன். அப்போதெல்லாம் டாக்டர் அம்பேத்காரின் பெயர்கூட இந்தப் பகுதி மக்களுக்குத் தெரியாது. வீசும் கடும் புயல்களையும் தாங்கிக் கொண்டு, நிறுவனத்தைத் தாங்கி நிற்கும் ஒரே தூணாக நான் மட்டும்தான் இருக்கிறேன்.

"உருவாகியுள்ள நிலை வருந்தத்தக்கதுதான்; ஆனால், இது கண்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் மனங்குலையவோ, ஊக்கம் குறையவோ வேண்டியதில்லை; சம்மேளனம் தொடர்ந்து பணியாற்றும்; ஏனெனில், அதன் இலட்சியம் நியாயமானது; நல்லெண்ணங்கொண்டோரின் ஆதரவையும் அன்பையும் பெற்றது.

பாரிஸ் உடன்படிக்கை தரும் சுயாட்சி

டுனீஷியாவில் கருத்து வேற்றுமை

டுனிஸ், எப். 23—

டுனீஷியாவுக்கு சுயாட்சி வழங்க பாரிசில் நடைபெற்ற ஒப்பந்தத்தை டுனீஷியாவில் உள்ள பிரெஞ்சுக் குடிமக்கள் எதிர்க்கின்றனர்; சுயாட்சி வழங்கப்பட்டால் தங்களுக்குள்ள சர்க்கார் பதவிகள் பறிபோகுமென்று இவர்கள் அஞ்சுகின்றனர்.

பாரிஸ் ஒப்பந்தத்தை பிரெஞ்சுப் பாராளுமன்றம் ஒத்துக்கொள்ளாதபடி இவர்கள் கிளர்ச்சி செய்யப் போகிறார்களாம். இவர்கள் பெரும்பாலும் டுனீஷிய சர்க்காரில் பதவி வகிப்பவர்கள்; நேற்று இவர்கள் 24 மணி நேரம் வேலை நிறுத்தம் செய்து தங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள்.

இவர்களையன்றி, வேறு சில புரட்சி மனம் கொண்டோர், தாங்கள் பாரிஸ் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பாக பலாத்காரத்தை கடைபிடிக்கப்போவதாகக் கூறியுள்ளனர். இதன் மூலம் இப்போது டுனீஷியாவில் நிலவும் அமைதி குலைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டுனீஷியர்களுக்குள்ளேயே இந்தப் பாரிஸ் ஏற்பாட்டிற்கு எதிர்ப்புகளும், வேறுபட்ட கருத்துக்களும் காணப்படுகின்றன.

நாடு கடத்தப்பட்டு, இப்போது டுனீஷியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டுள்ள தேசியக் கட்சியின் தலைவர் போர்கிபாவின் ஆதரவாளர்கள் இந்த ஒப்பந்தத்தை வரவேற்கின்றனர்.

இப்போது ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் கலந்து கொள்ளும், பென் யூசுபின் கட்சியினர் இதை எதிர்க்கின்றனர்.

1954 ல் இந்திய சர்க்கார் அனுமதித்த முப்பத்தொன்பது தொழில்துறைத் திட்டங்கள் பிரச்சினையில், இந்தியக் கம்பெனிகள், தொழில்நுட்ப உதவிக்காக வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு மொத்தம் 44.6 லட்ச ரூபாய் செலுத்த வேண்டியிருந்தது.

திருட்டுச் சாராயம் குடித்த நீதிபதிகள்

டாக்டர்களும், போலீஸ் அதிகாரியும் பங்குபெற்றனர்

சூரத்தைச் சேர்ந்த இரு நீதிபதிகள், ஒரு போலீஸ் அதிகாரி, மூன்று டாக்டர்கள், மற்றும் இருவர் ஆகியோர் மதுவிலக்குச் சட்டத்தை மீறி மது குடித்திருந்ததாக முதல் வகுப்பு நீதிபதி முன் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றனர்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இரு நீதிபதிகளும் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கின்றனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களெல்லோரும் தாங்கள் குற்றவாளிகளல்ல என வாதிடுகின்றனராம்.

போலீஸ் அதிகாரியின் வீட்டில், சடந்த ஜனவரி 23-ந் தேதியன்று, நடைபெற்ற விருந்து ஒன்றில் இவர்கள் எல்லோரும் கள்ளத்தனமாகக் காய்ச்சப்பட்ட மதுவருந்தியதாக போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

போலீஸ் அதிகாரிமீது, தனது இல்லத்தில் மதுவிலக்குச் சட்டத்தை மீறும் குற்றம் புரிய அனுமதித்ததாக வேறு குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளதாம்.

இவர்களைப் பரிசோதனை செய்த டாக்டர், இவர்கள் குடித்திருந்ததாக உறுதிப்படுத்தியிருக்கிறார் என்றும், அந்த வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட சாராயம் பரிசோதிக்கப்பட்டபோது அது சாராயப் பொருள் கலந்ததுதான் என்று கூறப்பட்டுள்ளதாம்.

வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

வடநாட்டில் நீர்வழி போக்குவரத்து

திட்டங்களுக்கு ரூ. 25 லட்சம் ஒதுக்கப்படுகிறது

கல்கத்தா, ஏப் 22—

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து பற்றி ஐ. நா. தொழில் நுணுக்க ஆலோசகர் தந்த திட்டம் ஒன்றை இந்தியப் பேரரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதாம்.

பிரம்மபுத்திரா, அசாம் பகுதியில் உள்ள கிளை நதிகள் ஆகியவற்றில் பிரயாணிகளுக்கான 'விசைப் படகு'கள் ஓட்டுவதற்கும் கூட திட்டத்தில் இடமிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்தத் திட்டங்கள் பற்றிய குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டுவிட்டதாயும், இதற்காக சுமார் ரூ 26-லட்சம் வரையில், இந்தியப்பேரரசு முதல் ஒதுக்கியுள்ளதாயும் கூறப்படுகிறது.

ஓட்டும்-வெட்டும்!

"கடந்த 10 ஆண்டுகளில், மேனாட்டு வல்லரசுகள், 60 கோடி மக்களுக்கு முழு அரசியல் விடுதலை வழங்கியுள்ளன; இம்மக்கள் இன்று பத்துச் சுதந்தர நாடுகளைச் சேர்ந்தவர்கள்."

"சென்ற 10 ஆண்டுகளில் கம்யூனிஸ்டு ஏகாதிபத்தியவாதிகள் பலாத்காரத்தைக் கையாண்டு, 60 கோடி மக்களை அடிமைப் படுத்தியிருக்கிறார்கள்; 11 நாடுகளின் சுயாட்சி உரிமைக்கு அவர்கள் கேடு விளைவித்துவிட்டார்கள்."

இவ்வாறு அமெரிக்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

இளம்பிள்ளைவாத மருந்து

ஆராய்ச்சிக்கு இந்தியாவிலிருந்து 800 குரங்குகள்

புதுடில்லியிலிருந்து விமான மூலம், 800 குரங்குகள், டாக்டர் ஸால்க் கண்டுபிடித்துள்ள இளம்பிள்ளைவாத மருந்தைப் பரிசோதிப்பதற்காக நியூயார்க் வந்திருக்கின்றன. தெற்கு கரோலினாவில் உள்ள ஒரு ஆராய்ச்சி நிலையத்துக்கு இவை கொண்டு செல்லப்படும்.

செய்திச் சுருள்

ஐ. க. சம்மேளனத் திறப்பு விழா

20—4—55 மாலை 6 மணிக்கு சென்னை—இராயபுரம், பனைமரத் தொட்டி அம்மன்கோவில் எதிரில் 'ஐக்கிய கடலாளர் சம்மேளனம்' அலுவலகத்தை டாக்டர் சி ஆர். கிருஷ்ணப்பிள்ளை திறந்துவைத்து, கடலாளர் ஒன்றுபட்டுத் தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தோழர் என். ஜீவரத்தினம் தமது தலைமையுரையில் தொன்று தொட்டு கடல் தொழிலில், கப்பல் ஓட்டுவதில் அறிவும், திறனும் பெற்ற தென்னிந்தியா இன்று கோவணாண்டிகளாக, சோற்றுக்கில்லாமல் திண்டாடுவது ஏன்?—என்பதை விளக்கிப் பேசினார்.

மேலும் அவர், கப்பல் தொழிலுக்கு ஆள் தயாரிக்கும் முறையில் பம்பாய் மாகாணத்திற்கு மாதம் 60 பேரும், சென்னைக்கு 11 பேரும் என்ற பாரபட்சத்தை விளக்கினார். கப்பல் தொழிலுக்கு பம்பாய் துறைமுகத்திலும், கல்கத்தா துறைமுகத்திலும் ஆள் எடுக்கும் உரிமையிருக்கும்போது சென்னை துறைமுகத்திற்கு அந்த உரிமை இல்லாததைச் சுட்டிக் காட்டினார். தாய் மொழியே பயில வசதியளிக்கப்படாத தென்னிந்திய கடலாளி பரம்பரையின் தலையில் 'இந்தி தெரிந்தால்தான் கப்பல் தொழிலில் இடம் உண்டு,' என்ற கட்டாயத்தின் இரகசியத்தை அம்பலப்படுத்தினார். தென்னிந்தியரும், வட இந்தியரைப் போல் வாழ்வில் சமத்துவம் அடைய வேண்டுமானால், பம்பாய் வட்டாரத்திற்கும், கல்கத்தா வட்டாரத்திற்கும் உள்ள உரிமையும், வசதியும் சென்னை வட்டாரத்திற்கும் இருக்க வேண்டுமென்று கூறினார்.

முற்போக்கு இளைஞர் படிப்பக முதலாண்டு விழா

திண்டுக்கல் வட்டச் சாலைபுதூரில் உள்ள மேற்படி படிப்பகத்தின் ஆண்டு விழா, 14—4—54ல் நடைபெற்றது. அன்று மாலை விடிவெள்ளி மைதானத்தில், தோழர் டி. எ ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கா. சா. சோமசுந்தரம், வாலையானந்தர், என். முனிசாமி, அ பால்ராஜ், கோ. நாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இவ்வாண்டிற்கு செயலாளராக ராசேந்திரனும், துணைச் செயலாளராக கோ. நாராயணனும், பொருளாளராக அ பால்ராசும், செயற்குழு உறுப்பினர்களாக ஐந்து பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூறைநாடு திரு. வி. க. படிப்பக பொதுக் கூட்டம்

17—4—55 மாலை 6½ மணிக்கு கூறைநாடு ஆராயத் தெருவில் திரு வி. க. படிப்பகச் சார்பில், தோழர் வி. ஏ. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கே. எஸ். சௌந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் பேசிய பிறகு தோழர் டி. கே. சீனுவாசன் திரு. வி. க. வின் தொண்டினைப் பற்றியும் இன்றைய அரசியல் நிலைபற்றியும் பேசினார்.

பேராசிரியர் சுந்தரனார் நூற்றாண்டு விழா

17—4—55 காலை 10 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில், தோழர் மா. சண்முகனார் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில், தோழர்கள் இ. மு நெடுமாறன், மா. பா. சாரதி, எம். கே. மணி, தி. தி பாலு, எச். சாமிநாதன் ஆகியோர் சுந்தரனார் அவர்களின் அரியபணியினைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

தஞ்சை, திருச்சிக்கு நீர்ப்பாசன திட்டங்கள்

சுமார் ரூ. 3 கோடி செலவில் கால்வாய் வேலை துவக்க முயற்சி

காவிரியின் வலதுபுறத்தில் மேல் மட்ட கால்வாய் திட்டம், நதியின் இடதுபுறத்தில் புள்ளம்பாடி திட்டம் ஆகிய இரு நீர்ப்பாசன திட்டங்களும் திரும்ப பரிசீலிக்கப்பட்டு, நிதி வசதி கிடைத்ததும் நிறைவேற்றப்படுமாம்.

மேல் மட்ட கால்வாய் 86 மைல் நீளம் இருக்கும். முகப்பிலிருந்து 40 மைல் தூரத்துக்கு இது, தற்போதுள்ள மேல் மட்ட கால்வாய் ரீதியிலேயே சென்று 40-வது மைலில் 2 பெரிய ஏரிகள் அல்லது தேக்கங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்தேக்கங்களின் நீரைக் கொண்டு அப்பகுதியில் இரு போகம் இல்லாவிடினும், ஒரு போகம் தாராளமாக பயிர் செய்ய முடியும் என்று நம்பப்படுகிறது.

இந்த மேல்மட்டக்கால்வாய் 119 ஏரிகளுக்கு நீர் அளிக்கும் என்று கூறப்படுகிறது. (57 ஏரிகள் திருச்சி தாலுகாவிலும் 62 ஏரிகள் தஞ்சை தாலுகாவிலும் உள்ளவை) இரு தாலுகாக்களிலும் 12 ஆயிரம் ஏகருக்குக் கூடுதலாக பாசன வசதி தரும்.

இந்தக் கால்வாய் திட்டத்தில் 2-வது கட்டம் திருச்சி தாலுகாவில் ஹெனிர்பட்டி வரை 24 மைலுக்கு செல்லும். 3-வது கட்டம் தஞ்சை தாலுகாவில் மகாதலை முதவாரி வரை செல்லும்.

இந்தத் திட்டம் பூராவுக்கும் ரூ. 1,56,00,000 செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கூடுதலாக சுமார் 7,400 டன் உணவு தானியம் கிடைக்கும்.

புள்ளம்பாடி கால்வாய், மேல் அணையில் முகப்புகொண்டு சுமார் 54 மைல் தூரம் செல்லும். லால்குடி, உடையார்பாளையம் தாலுகாக்களில் 22,114 ஏகர் நிலங்களுக்கு இது பாசன வசதி செய்யும். 7,667 ஏகருக்கு பாசன வசதி செய்ய 8 புதுக் குளங்கள் அமைப்பதும் இத்திட்டத்தில் உள்ளடங்கியவை.

தற்போதுள்ள பெருவளை கால்வாய் செல்லும் பாணியிலேயே இக்கால்வாய் நந்தியார் வரை செல்லும்; நீர்ப்பாசன பிரதேசங்கள் நந்தியாருக்கும் அப்பால்தான் ஆரம்பமாகின்றன. இத்திட்டச் செலவு ரூ. 1,42,00,000 ஆகும் எனக் கூறப்படுகிறது.

உடையார்பாளையம் தாலுகா சுக்காரம் ஏரியிலும், தூதூர் பெரிய ஏரியிலும் இந்தக் கால்வாய் முடிவுறும்.

இரண்டு திட்டங்களுக்கும் சேர்ந்து ரூ. 2,98,00,000 செலவாகிறது.

உயர்நிலைத் துவக்கப்பள்ளி ஆண்டு விழா

இராமநாயக்கன்பட்டி க்ஷத்திரிய உயர்நிலைத் துவக்கப் பள்ளியின் 12-வது ஆண்டு நிறைவு விழா 11—4—55 மாலை 7 மணிக்கு திரு சி. ஏ. ஹென்றி தலைமையில் நடைபெற்றது. பள்ளி ஆண்டு அறிக்கையை பள்ளித் தலைமை ஆசிரியர் திரு ஜி. வைரமுத்து வாசித்தார். திரு. வி. சீனிவாசன், திரு. ஏ. எம். சுப்ரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பள்ளி மாணவ, மாணவிகளால் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

வேலூர் (சேலம்) மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழா

16—4—55 மாலை 5 மணிக்கு கந்தசாமி கவுண்டர் உயர்நிலைப் பள்ளியில் மேற்படி மன்ற ஆண்டு விழா திரு இராமராசன் தலைமையில் நடைபெற்றது. தோழியர் அருண்மொழி 'மக்கள் கவி' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

சிறு தொழில் அபிவிருத்தி

ரூ. 5-கோடி செலவிடத் திட்டம்

1955—56ல், சிறிய தொழில்களின் அபிவிருத்திக்காக ரூ. 5-கோடி பெறுமான திட்டங்களை மாநில சர்க்கார்கள் தயாரித்திருக்கின்றனவாம்.

200 எஞ்சினீயரிங் பட்டதாரிகளுக்கு சிறிய தொழில்களில் பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாம்.

சித்தரஞ்சன் இரயில் எஞ்சின் உற்பத்திசாலையில், 1954 ஏப்ரலிலிருந்து டிசம்பர் வரை மொத்தம் 68 இரயில் எஞ்சின்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

பாரதிதாசன் பிறந்தநின விழா

21—4—55 மாலை 6 மணிக்கு பூவிருந்தவல்லி ஆஞ்சநேயர் கோவில் தெருவில், தோழர் டி கே. போரூரான் தலைமையில் மேற்படி விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, முத்துராமன், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசினர்.

சங்கரன் படிப்பகக் கூட்டம்

திருச்சி உறந்தை மேட்டுத் தெருவில் அமைந்திருக்கும் சங்கரன் படிப்பகத்தில் 20—4—55 இரவு 9 மணியளவில் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் வேணுகோபால் செயலாளராகவும், பராந்தகன் துணைச் செயலாளராகவும், கி. இராசாராம் பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் முத்துக்குமாரசாமி, மதிவாணன், சீ நக்கீரன், த துரைராசன், தமிழ்ச்செல்வன், மு மகாலிங்கம், தங்கவேலு, கி. லெ. சந்திரசேகரன், த. வில்லவன்கோதை ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொன்மலை — திருக்குறள் கழகம்

18—4—55 மாலை 6 மணிக்கு மேற்படி கழகத்தின் சிறப்புக் கூட்டம், இரயில்வே படிப்பக மன்றத்தில் நடைபெற்றபோது, மதுரை தியாகராசர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு. ஔவை சு. துரைசாமி, 'வள்ளுவர் வாய்மொழி' என்னும் பொருள்பற்றி மிக எளிய, இனிய நடையில், நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

பெயர் சூட்டல்

உடுமலை வெங்கடேசா மில்லில் பணியாற்றும் தோழர் சொக்கலிங்கம் அவர்களது ஆண் மகவுக்கு தோழர் வே காளியப்பன் அவர்களால் 'மதிவாணன்' என பெயர் சூட்டப்பட்டது. அதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

மதுரை தோழர் ராஜாராம் (ஒளி ஓவியம்) அவர்களின் பெண் மகவுக்கு, 9—4—55ல், தோழர்கள் எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி ஆகியோரால் 'திலகவதி' எனப் பெயரிடப்பட்டது அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அனுதாபம்

நெல்லை தி. மு. கழக மாவட்டக் குழு உறுப்பினரும், பாளையங்கோட்டை மணிமார்க் பொட்டு வெடிக் கம்பெனியின் பங்காளருமான தோழர் ஏ தங்கையா அவர்களது சகோதரர் செல்லத்துரை அவர்களுடைய 1½ வயதுப் பெண் குழந்தை இந்திராணி, கடந்த 2—4—55-ல் இயற்கை எய்தியமை குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமணங்கள்

★

10—4—55 காலை 9 மணியளவில் தோழர் எஸ். கே. கண்ணன் தலைமையிலும், நாஞ்சில் கி. மனோகரன் முன்னிலையிலும் பெங்களூர் இலக்குமணபுரி தோழர் எம். துரைசாமி—தோழியர் ஆர். கிருட்டிணவேணியம்மை திருமணம் நடைபெற்றது. தோழர்கள் கி. மனோகரன், எம். கிருட்டிணன், ஆர். முனுசாமி, கே. வேலு ஆகியோர் 'திருமணம்' என்பது பற்றியும், மணமக்களை வாழ்த்தியும் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

11—4—55 காலை 10 மணிக்கு, ஆரணி (வ. ஆ.) ஆர். கிருஷ்ணசாமி அவர்கள் மகன் தோழர் முருகேசன்—தோழியர் சாந்தா அம்மையார் திருமணம் ஆரணி வக்கீல் ஆறுமுக முதலியார் தெரு மணமகன் இல்லத்தில் தோழர் ஆ. இரா. தேப்பெருமாள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிக்கண்ணன், மொ. அருணாசலம் ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

11—4—55ல், மதுரையைச் சேர்ந்த நாத்தனேரியில் தோழர் பொன்னையா—தோழியர் எல்லம்மாள் திருமணம் தோழர் எ. பி. துரைப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர் க. ஆறுமுகனார் சொற்பொழிவாற்றினார். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகதரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

12—4—55ல், தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை தோழர் செல்லையன்—தோழியர் பாப்பா அம்மையார் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

22—4—55 காலை 5 மணிக்கு, சென்னை ஓட்டேரி, சுப்பராய செட்டித் தெரு, முதல் சந்து எண் 4 இல்லத்தில், தோழர் ஜே. நல்லப்பன்—தோழியர் ஆர். சாரதா திருமணம் தோழர் ஏ கே. சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். டி. அரசு, நாஞ்சில் சேவியர், இளம்பரிதி ஆகியோர் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

17—4—55ல், தமிழ் எழுத்தாளர் சங்க விளம்பரச் செயலாளர் திரு. கே. பி. பாலசுப்பிரமணியத்தின் சகோதரி தோழியர் சரசுவதிக்கும்—மைலாப்பூர் தோழர் ராமனுக்கும் கோடம்பாக்கத்தில் நடைபெற்ற திருமண விழாவிற்கும், மாலையில் நடைபெற்ற வரவேற்புக்கும், இன்னிசைக்கும் நண்பர்களும் உறவினர்களும் ஏராளமாகக் கலந்துகொண்டனர்.

• • •

11—4—55 காலை 9 மணியளவில், பாபநாசத்தில், தோழர் ப. கணேசன் — தோழியர் சரசுவதி திருமணம் தோழர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி சென்னைத் தோழர் கே. கோவிந்தசாமி, மற்றும் பலரும் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக மணமக்களால், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

உலகம் சுற்றிவர அணுசக்தி கப்பல்

அடுத்தடுத்து எண்ணெய் நிரப்பாது

ஆயிரக்கணக்கான கல் பிரயாணம் செய்யும் அமைப்புடையது'

'நீதியான நிரந்தர சமாதானம் பெறும் ஏற்பாடு'

அதற்கான பெருந் தொகையை அனுமதிக்குமாறு ஐசனோவர் கோரிக்கை

நீதியான நீடித்த சமாதானத்தை நிலை நாட்டவேண்டும் என்ற அமெரிக்காவின் உறுதியைப் பிறருக்கு அறிவிக்கும் கருத்துடன், அணுசக்தியால் இயக்குவிக்கப்படும் ஒரு வர்த்தகக் கப்பலை உலகம் முழுதும் சுற்றிவர ஏற்பாடு செய்யப் போவதாக அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் அறிவித்துள்ளார்.

கப்பல் இயக்கத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் எரிபொருள் அடுத்தடுத்து நிரப்பப்பட வேண்டிய அவசியமில்லாமல், ஆயிரக்கணக்கான கல், அணுசக்தியால் ஓடக்கூடிய கப்பலாகும். அது, மனித நல்வாழ்வை வளர்க்க எப்படி அணுசக்தி உதவக்கூடும் என்பதை உலக மக்களுக்கு அறிவிக்க, இக்கப்பல் சுற்றுப் பயணம் உதவக்கூடும் என நம்பப்படுகிறது.

இப்புதிய கப்பலைக் கட்டுவதற்காகத் தேவைப்படும் பெருந் தொகையை அனுமதிக்குமாறு அமெரிக்கக் காங்கிரசைக் கேட்டுக்கொள்ளப் போவதாக குடியரசுத் தலைவர் ஐசனோவர் அறிவித்துள்ளார்.

அறப்போர் வீரர்களை ஆப்பிரிக்காவுக்கு அனுப்புகிறதாம்!

போர்ச்சுகீசிய சர்க்கார் கொடுமை

கோவாவில் கடந்த ஆகஸ்டு 15-ம் நாள் அறப்போரில் கலந்துகொண்ட இந்தியர்கள் பலரை போர்ச்சுகீசிய சர்க்கார் நாடு கடத்தியிருக்கிறதென்றும், இதுபற்றி ஆலோசிப்பது அவசியமென்றும் கூறி மக்கள் சபையில் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது. இப்பிரச்சினை மிகவும் கடுமையானதாகையால், ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது சபைத் தலைவர் தீர்ப்புச் சொல்வதை பண்டித நேரு திரும்பிவரும் வரையில் நிறுத்தி வைத்திருக்கிருர்.

இதுவரை சுமார் 32 பேர்களை போர்ச்சுகீசிய சர்க்கார் நாடு கடத்தியிருக்கிறதென்றும், அவர்களில் சிலர் இந்தியக் குடிமக்கள் என்றும் மக்கள் சபையில் எடுத்துக் காட்டப்பட்டது.

சென்ற ஆகஸ்டில் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோரை 28 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகளுக்குக் குறையாமல் போர்ச்சுகீசிய சர்க்கார் தண்டித்திருக்கிறதாம்.

"இப்பிரச்சினை பற்றி உறுப்பினர்களுக்கு மேற்கொண்டு செய்திகள் ஏதும் தெரியுமா?" என்று சபைத் தலைவர் கேட்டபோது, அசோக் மேத்தா, 'நாடு கடத்தப்பட்டவர்கள் பலர் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு வெளியேற்றப்பட்டனர்,' என்று குறிப்பிட்டார்.

இப்பிரச்சினை இந்திய மேல் சபையிலும் எழுப்பப்பட்டது.

"இந்திய சர்க்கார் போர்ச்சுகீசிய சர்க்காரின்மீது அனுதாபத்துடன் நடந்துகொள்ளும்போது, போர்ச்சுகீசிய சர்க்கார் தகாத முறையில் நடந்து, நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது," என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இந்தியர்களை போர்ச்சுகீசிய சர்க்கார் நாடு கடத்தியது, இந்தியாவைப் பொறுத்த மட்டில் மிகவும் கடுமையான பிரச்சினை என்றும், இது நாட்டையே பாதிக்கும் பிரச்சினை என்றும் மக்கள் சபையில் எடுத்துக் காட்டப்பட்டது

'மந்திரி சபையில் பிரதிநிதித்துவம் அளிக்கவும்

ஆந்திர அரிசன சட்ட சபை உறுப்பினர்கள் கோரிக்கை

ஆந்திர மந்திரி சபையில் அரிசன வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டுமென்று ஆந்திர சட்ட சபையில் உள்ள 24 உறுப்பினர்களும் நடைபெற்ற தங்கள் கூட்டமொன்றில் ஆந்திர சர்க்காரைக் கோரினர். இக்கூட்டத்திற்கு சென்னையின் முன்னாள் அமைச்சர் கூர்மையா தலைமை தாங்கினார்.

ஆந்திர சட்ட சபையில் உள்ள 24 அரிசன உறுப்பினர்களில் 23 பேர் ஐக்கிய காங்கிரஸ் கட்சியினர்; ஒருவர் பி. சோ. கட்சியைச் சேர்ந்தவர் ஆவார்.

இக்கூட்டத்தை ஆந்திர அமைச்சர் டி. சஞ்சீவய்யா ஆரம்பித்து வைத்தார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரிசனங்களின் முன்னேற்றத்திற்கு திட்டமிடவேண்டுமென்றும், அவர்களுக்குப் போதுமான வேலைதரவேண்டுமென்றும், அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்றும் அவர் கோரினார்.

★★★★★★ ★★★★★★★★★★★

அன்பர்களுக்கு வேண்டுகோள்

அன்பரீர்,

24—4—55-ல், தி. மு. கழகப் பொதுக்குழு என்னைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறபடியாலும், 'நம் நாடு' ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறபடியாலும், இனி, 'பொதுச்செயலாளர், தி. மு. க.' என்ற முகவரிக்கும், 'ஆசிரியர், நம் நாடு,' என்ற முகவரிக்கும் அனுப்பும் கடிதங்கள், ரிஜிஸ்டர், மணியார்டர் ஆகியவைகளில், 'இரா. நெடுஞ்செழியன்,' என்று பெயரிட்டு அனுப்பக் கோருகிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்

★★★★★★★★★★★★★ ★★★★

சென்னையில் மே தின விழா

★

"சென்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டு மே தினம் மிகச் சிறப்பாக திருவல்லிக்கேணி கடற்கரையில் கொண்டாட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"பாட்டாளி மக்களின் அணி வகுப்பினைக் கொண்ட பெரியதோர் ஊர்வலத்திற்கான ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

"சென்னையில் உள்ள எல்லாக் கிளைக் கழகங்களும் இம் மாபெரும் ஊர்வலத்தில் வட்டாரவாரியாகக் கலந்து கொள்ள இருக்கின்றன. இவ்வணிவகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் தொழிலாளர் நிறுவனங்கள் விவரத்தை மாவட்டக் கழகத்திற்கு 28—4—55-க்குள் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன,"

என்று சென்னை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி கேட்டுக்கொள்கிருர்.

★★★★★★★★★★★★★★★★★★

ஆப்பிரிக்கர்களை கோட்டடியில் அடைப்பர்!

வெள்ளை சர்க்காரின் புதிய அடக்குமுறை

தென்னுப்பிரிக்காவில், வெள்ளையர் சர்க்காரை எதிர்க்கும் கிளர்ச்சிக்காரர்களை தனியாகப் பிரித்து, நாட்டின் பல பாகங்களிலும் அவர்களுக்கென்று அமைக்கப்படும் தனிக் கோட்டடிகளில் அடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறதாம்.

இதற்கு முன்பெல்லாம், கிளர்ச்சிக்காரர்கள் எனப்படுவோரை ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் நுழையக் கூடாது என்று தடுத்திருந்தனர்.

ஆப்பிரிக்க இளைஞர்களை அடைத்து வைக்க தென்னுப்பிரிக்க யூனியன் பகுதிகளில் கொட்டடிகள் தயாராக இருக்கின்றன என்று தெரிகிறது.

56 ஆதார விவசாயப் பள்ளிகளிலும், 44 விஸ்தரிப்பு பயிற்சி கேந்திரங்களிலும் கொடுக்கும் பயிற்சி போதுமானவையாக இல்லாமையால், மேலும் 25 ஆதார விவசாயப் பள்ளிகளும், 16 ஆதாரப் பள்ளிகள், 18 விஸ்தரிப்பு பயிற்சி செண்டர்கள் ஆரம்பிக்கப் படும்என்றும் தெரிகிறது.

தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

பலன்களை தொழிலாளி-குடும்பங்களும் பெற ஏற்பாடாம்

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் பலன்களை திட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் குடும்பங்களும் பெறும் வகையில் விரிவுபடுத்தும் திட்டம் பற்றி இந்தியப் பேரரசு பரிசீலித்துவருவதாக மத்திய தொழிலாளர்நல மந்திரி கந்துபாய் தேசாய் தகவல் தந்திருக்கிறார்.

தொழிலாளர்கள், ஆயுர்வேத, யூனனி முறைகளின் கீழும் நோயாளிகளுக்கு சிகிச்சை தரவேண்டுமெனக் கேட்டிருப்பதாயும், சட்டத்தின்படி உருவாக்கப்படும் 'கார்ப்பரேஷன்' போதுமான தொழிலாளர்கள் அம்முறைகளில் சிகிச்சை பெற விரும்பினால் அதற்கு ஏற்பாடு செய்ய வாக்களித்துள்ளது என்றும் மந்திரி தெரிவித்திருக்கிருர்.

புதுவையில் மே தின விழா

8—5—55 ஞாயிறு மாலை 6-மணிக்குப் புதுவை ஒதியஞ்சாலைத் திடலில் தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் மே தின விழா நடைபெறும்.

தோழர்கள் என். வி. நடராசன் அவர்களும், ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

அன்று காலை முத்தால்பேட்டை, லாசப்பேட்டை ஆகிய ஊர்களில் கிளைக் கழகத் திறப்பு விழாக்களும், புதுவையில் 'திராவிட இளைஞர் முன்னேற்றக் கழக'த் திறப்பு விழாவும் நடைபெறும்.

மாலை 5-மணிக்கு தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் ஊர்வலம் ஒன்றும் நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஐந்து ரூபாய் கடன் தகராறு

ஐந்து பேருக்கு மரண தண்டனையில் முடிந்தது

பாண்டு என்பவரிடமிருந்து தன் மகன் கடன் வாங்கியது பற்றி தமக்கு ஏதும் தெரியாதென ஜித்நமரியா என்பவர் கூறினர்—5 ரூபாய் கடனை வசூலிக்க வந்த பாண்டு, அவரது இரு சகோதரர்கள், மற்றும் அவர்களது தந்தையரான சோனு, சோமா என்ற இருவர் ஆக ஐந்து பேர்களும் தமரியாவின் பதிலைக் கேட்டு, ஆத்திரப்பட்டு, அவரைப் பட்டப்பகலில் படுகொலை செய்தனராம்.

இந்த ஐந்து பேர்கள் மீதும் மான்பூம் மாவட்ட நீதி மன்றத்தில் தொடரப்பட்ட கொலை வழக்கில் நீதிபதி அந்த ஐவருக்கும் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருக்கிருராம்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

பெத்துநாய்க்கன்பேட்டை, காசி விசுவநாதர் கோவிலருகில்

26—4—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: சி. ஆர். பாலசுந்தரம்

பேசுவோர்:

என். வி. நடராசன்
என். எஸ். இளங்கோ
எம். எஸ். இராமசாமி
போளூர் கே. சுப்பிரமணியம்

★

திசையன்விளை

ஜனுப் உ.சே. அவர்கள் பேட்டை

28—4—55 இரவு 7½ மணிக்கு

தலைவர்:

எஸ். சண்முகம் குலசேகரன்

பேசுபவர்:

ஈ. வெ. கி. சம்பத்

நெடுஞ்செழியன் மன்றப் படிப்பக திறப்பு விழா

27—4—55 அன்று, தேனீநகர் நெடுஞ்செழியன் மன்றத்தின் சார்பாக, நெடுஞ்செழியன் மன்றப் படிப்பகத் திறப்பு விழா நடைபெறும். தோழர்கள் செழியன், காதர் மைதீன், இந்திரசித்து ஆகியோர் பேசுவர்.

மருந்துக் கடையில் குரங்குக் கூட்டம்

கல்கத்தாவில் பார்க் சர்க்கஸ் பகுதியில் உள்ள மருந்துக் கடை ஒன்றில் குரங்குக் கூட்டம் ஒன்று புகுந்து கலகம் விளைவித்தது.

கடையில் உள்ள கண்ணாடிகளை உடைத்தும், அலமாரிகளைத் திறந்தும் மருந்துப் புட்டிகளை எடுத்து, மருந்தையும், சர்பத்தையும் குடித்து மகிழ்ந்தனவாம்.

ஏராளமான கண்ணாடி புட்டிகள், டியூபுகள், சிரிஞ்சுகள் ஆகியவற்றை நாசப்படுத்திவிட்டு குரங்குகள் வெளியேறி விட்டனவாம்.

காலையில் கடையைத் திறந்ததும் கடைக்காரர், உள்ளே 'அரை போதை'யில் அசைந்து கொண்டிருந்த குரங்கு ஒன்றைக் கண்டார். அவரைக் கண்டதும், அந்தக் குரங்கும் தப்பி ஓடிவிட்டதாம்.

குரங்குகள்மீது போலீஸ் நடவடிக்கை எடுக்க முடியாது என்ருலும், கடைக்காரர் வேதனையுடன் போலீசில் புகார் செய்திருக்கிருராம்.

கம்யூனிஸ்டுகளுக்கு - ஊக்கம் தராதிருக்க!

சீனப் பிரதமர் உறுதிமொழி?

சிங்கப்பூர், ஏப். 25—

கொழும்பு அரசுகளான இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, பர்மா, பாகிஸ்தான் ஆகியவற்றிலும், தாய்லாந்து, பிலிப்பைன் நாடுகளிலும் உள்ள கம்யூனிஸ்டுகளுக்கு ஊக்கம் அளிப்பதில்லை என சீனப் பிரதமர் சூ-என்-லாய் வாக்குறுதி தந்துள்ளதாக இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை இங்கு தெரிவித்திருக்கிருர்.

மீர்சாப்பூரில் சுர்க் என்ற இடத்தில் உள்ள உத்திரப்பிரதேச சர்க்காரின் சிமிட்டி உற்பத்திசாலையில், இப்போது நாளொன்றுக்கு 700 டன் வீதம் சிமிட்டி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

முகவரி மாற்றம்

டி. பி. அழகமுத்து,
நேஷனல் மோட்டார் சர்வீஸ் லிமிடெட்,
18, மதுரை ரோடு, திருச்சி.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.